**ஹெலன்கோ ஹோட்டல் & ஸ்பா பிறைவேட் லிமிட்டட் - 2019**

---

## 1.1 அபிப்பிராயம்

ஹெலன்கோ ஹோட்டல் அன்ட் ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட்டின் (''கம்பனி'') 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்ட மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### விடயத்தை வலியுறுத்துதல்

எனது அபிப்பிராயத்தை முனைப்பழியாக்காமல் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு எடுகோள் தொடர்பான நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு 2.5 இன் மீது நான் கவனம் செலுத்தியுள்ளேன். மேற்படி குறிப்பில் குறிப்பிட்டவாறு கம்பனியின் பணிப்பாளர் சபை அம்பாந்தோட்டையில் ஹோட்டலை நிர்மாணிப்பதற்கான செயற்திட்டத்தை தொடராமலிப்பதற்கு கம்பனி தீர்மானித்திருந்தது. இதன் விளைவாக கம்பனியின் ஹோட்டல் நிர்மாண செயற்பாடு முடிவிற்கு வந்திருந்தது. மேலும் 2017 ஆகஸ்ட் 01 ஆம் திகதிய 17/1613/733/029 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் கன்வில் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்டில் (தாய்க் கம்பனி) அவர்களது பங்கிற்கான விகிதத்தில் அதன் பங்குதாரர்களிற்கு கம்பனியின் பங்குரிமையயை மாற்றுவதற்கு பொது தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சானது அதனது அறிவுறுத்தல்களை வழங்கியிருந்தது.

ஹெலன்கோ ஹோட்டல்ஸ் & ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட்டிலுள்ள கன்வில் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்டால் வைத்திருக்கப்படும் பங்குகளின் உரிமைமாற்றமானது அறிக்கையிடல் திகதியிலுள்ளவாறு செயன்முறையிலுள்ள சுயாதீன மதிப்பீட்டை அடிப்படையாககொள்ள வேண்டியிருந்ததால் கம்பனியானது எதிர்வரும் காலத்தில் கம்பனியை கலைப்பதற்கு தீர்மானித்திருக்கவில்லை. ஆகையால் நிதிக்கூற்றுக்களை தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு அடிப்படையில் தயாரித்தல் தொடர்கின்றது.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை

உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனி மற்றும் தொகுதியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனி மற்றும் தொகுதியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி மற்றும் தொகுதி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனி மற்றும் தொகுதியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| **இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் (எஸ்எல்எவ்ஆர்எஸ்) 16** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| எஸ்எல்எவ்ஆர்எஸ் 16 – ‘‘குத்தகைகள்’’ ஆனது 2019 சனவரி 1 இலிருந்து செயற்பாட்டிற்கு வரும் வகையில் சொத்துக்களை பயன்படுத்தும் உரிமை தொடர்பில் குத்தகைக்கு பெற்றவர்கள் அவர்களது நிதி நிலைமைக் கூற்றில் அனைத்து குத்தகைகளையும் குத்தகை பொறுப்புக்களாக இனங்காண்பதை தேவைப்படுகின்றது. ரூபா 172,317,838 மொத்தப் பெறுமதிக்கு 99 ஆண்டு குத்தகை உடன்படிக்கையின் கீழ் நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து அம்பாந்தோட்டையில் ஹோட்டல்களை நிர்மாணிப்பதற்காக காணியொன்றை கம்பனி பெற்றிருந்தது. மேற்படி நியமத்தின் பிரகாரம் சொத்துக்களை பயன்படுத்தும் உரிமை மற்றும் குத்தகை பொறுப்புக்களாக ஐந்தொகையில் குத்தகையிலாதன காணியை கம்பனி இனங்கண்டிருக்கவில்லை. | சொத்துக்களை பயன்படுத்தும் உரிமையை இனங்காணுதல் தொடர்பான அவதானிப்புடன் இணங்கப்படுகின்றது.<br><br>எனினும் இது ஒட்டுமொத்த தொகையொன்றாக முழுமையாக தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்ததால் குத்தகை பொறுப்பு கம்பனியால் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | நியமத்துடன் இணங்குவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

| **பிஈடி/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கை** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2003 யூன் 2 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் நல்லாளுகைக்கான வழிகாட்டல் தொடர்பான வழிகாட்டல் இல. 9.7 இன் பிரகாரம் சம்பளங்கள் மற்றும் படிகளானது அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டம் மற்றும் பதவியுயர்வுகளை அடிப்படையாக கொண்டிருக்க வேண்டியதுடன் திறைசேரி செயலாளரின் அங்கீகாரமின்றி மீளாய்வு எதுவும் அனுமதிக்கப்படக்கூடாது. எனினும் கம்பனி சிரேஷ்ட முகாமைத்துவத்தின் சம்பளங்களிற்காக அங்கீகாரங்களை பெற்றிருக்கவில்லை. | குறித்த காலப்பகுதியின் போது ஹெலன்கோ ஹோட்டல் & ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட்டின் கீழ் ஊழியர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. | கம்பனி கொண்டிருக்கும் சேவைகள் செலவினங்களை பகிர்ந்துகொள்வதால் சுற்றறிக்கையுடன் இணங்குவதற்கும் துணைக்கம்பனிகளும் இதனையே பின்பற்றுவதற்கும் முகாமைத்துவம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் |

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 25,299,887 இலாபமாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 31,848,469 ஆக காணப்பட்டதால் நிதி விளைவுகளில் ரூபா 6,548,582 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் ஏனைய செயற்பாட்டு வருமானம் ரூபா 10,577,783 ஆல் குறைவடைந்தமையே இவ் வீழ்ச்சிக்கான காரணமாகும்.

2.2 பிரதான வருமான செலவின விடயங்கள் தொடர்பான போக்கு பகுப்பாய்வு

கடந்த மூன்று ஆண்டுகளிற்கான வருமானம், நிர்வாக செலவினம் மற்றும் தேறிய இலாபம்/ நட்டம் பின்வருமாறு உள்ளன.

| ஆண்டு | 2019 | 2018 | 2017 | 2016 | 2015 |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| மொத்த வருமானம் | 39,142,280 | 49,770,092 | 89,054,257 | 269,521,228 | 249,803,774 |
| நிர்வாக செலவினம் | 4,003,549 | 6,415,872 | 7,354,115 | 18,926,521 | 10,497,440 |
| வரிக்கு பின்னரான தேறிய இலாபம்/ நட்டம் | 25,299,887 | 31,848,469 | 63,498,793 | 227,498,057 | 95,160,112 |

2.3 விகிதப் பகுப்பாய்வு

கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற நிதிக்கூற்றுக்கள் மற்றும் தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான முக்கிய சில விகிதங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யப்பட்டு கீழே தரப்பட்டுள்ளன.

| விகிதங்கள் | 2019 | 2018 |
|---|---|---|
| நடைமுறை விகிதம் | 13.33:1 | 66.07:1 |
| விரைவு விகிதம் | 13.33:1 | 66.06:1 |
| ஈடுபடுத்திய மூலதனம் மீதான திரும்பல் | 11.51:1 | 3.78:1 |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பொதுமுயற்சிகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட பணிப்புரைகளின் பிரகாரம் கம்பனியானது சினோலங்கா ஹோட்டல்ஸ் & ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட்டிற்கு ரூபா 400 மில்லியன் குறுங்காலக் கடனொன்றை சினோலங்கா | அவதானிப்புடன் இணங்கப்படுகின்றது. Grand Hyatt செயற்திட்டத்தின் முன்மொழியப்பட்ட கடன் நிகழ்ச்சித்திட்டம் அல்லது முன்மொழியப்பட்ட விலக்களிப்பு நிகழ்ச்சித்திட்டம் | கடனை உரிய கால அடிப்படையில் அறவீடு செய்வதற்கும் கம்பனி உயர்ந்தளவு வருமானத்தை பெற்றுக்கொள்வதற்கு அத்தொகையை |

ஹோட்டல்ஸ் & ஸ்பா (பிறைவேட்) லிமிட்டட்டுடன் எந்தவொரு எழுத்து மூலமான உடன்படிக்கையும் இல்லாமல் 8.79 சதவீத வட்டி விகிதத்தில் வழங்கியிருந்தது (2018 சனவரி 12 இல் ரூபா 300 மில்லியன் மாற்றப்பட்டிருந்ததுடன் 2018 சனவரி 18 இல் ரூபா 100 மில்லியன் மாற்றப்பட்டிருந்தது). கம்பனியானது நிதிக்கூற்றில் பெறவேண்டிய வட்டியை காட்டியிருந்த போதிலும் இத் தொகைகள் கணக்காய்வுத் திகதி வரையிலும் சினோலங்கா ஹோட்டல்ஸ் அன்ட் ஸ்பா லிமிட்டட்டால் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.
விபரங்கள் பின்வருமாறு உள்ளன.

| **ஆண்டு** | **ரூபாவில் வட்டி தொகை** |
|---|---|
| 2018 | 33,915,753 |
| 2019 | 35,160,000 |
| **மொத்தம்** | **69,075,753** |

ஊடாக தேவையான நிதிகள் ஒழுங்கு செய்யப்பட்டிருக்காததால் குறித்த கடன் தொகையை தீர்ப்பனவு செய்யும் காலப்பகுதி முழுவதும் நிதி இடரை Grand Hyatt செயற்திட்டம் அனுபவித்திருந்தது. இதனால் கடனை தீர்ப்பனவு செய்தல் குறுங்கால அடிப்படையில் இடம்பெற்றிருக்கவில்லை.

முதலீடு செய்வதற்கும் முகாமைத்துவம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.